அலகு - 6

# எங்க ஊரு விளையாட்டு



எல்லோரும் ஆலமரத்தின் அடியில் கூடினர்.

"இன்றைக்கு என்ன விளையாட்டு விளையாடலாம்?" குமார் கேட்டான்.

"சைபால் விளையாடலாம்" என்று முத்து சொன்னான்.

எல்லோரும் 'சாட்-பூட்-திரி' போட்டார்கள்.

"வசந்தன் மரத்திற்குப் பின்னால் நின்றான். பத்து, இருபது, முப்பது என எண்ணத் தொடங்கினான். நண்பர்கள் ஆளுக்கொரு பக்கம் ஒளிந்துகொண்டனர். அதற்கு வசதியாகப் புளிய மரங்கள் நின்றன. "தொண்ணூறு, நூறு, .. சைபால் வருகிறேன்," என்று சொல்லிக்கொண்டு வசந்தன் நண்பர்களைத் தேடினான்.

வசந்தன் சுற்றிலும் பார்த்தான். "மூன்றாவது மரத்துக்குப் பின்னால் யாராக இருக்கும்...? மஞ்சள் பாவாடை..! அப்படியானால் கனிமொழிதான். கனிமொழி சைபால்..." அவன் கண் பொத்தி நின்ற மரத்தில் அடித்தான். பிறகு மற்றவர்களையும் தேடினான்.

ஒவ்வொருவரைப் பார்த்த போதும் அவன் மரத்தில் சைபால் அடித்தான். “இனி பிரியாவும் கண்ணனும் மட்டும்தான்...”

“கண்ணா...! நான் வசந்தனின் கவனத்தைத் திசை திருப்புகிறேன். நீ ஓடிச்சென்று சைபால் அடித்துவிடு.” பிரியா சொன்னாள். பிரியா ஒரு செடியை ஆட்டினாள். வசந்தன் அந்தப் பக்கமாகச் சென்றான். அதற்குள் கண்ணன் ஓடிவந்து ‘வசந்தன் சைபால்’ என்று மரத்தில் அடித்துவிட்டான்.

வசந்தனுக்கு ஏமாற்றம்! எல்லோரும் கண்ணனைப் பாராட்டினர். கண்ணனுக்கு சைபால் விளையாட்டு மிகவும் பிடித்துவிட்டது.



- இதுபோல் உங்கள் ஊரில் என்னென்ன விளையாட்டுகள் உள்ளன?
- நீங்கள் விளையாடிய விளையாட்டைப் பற்றிச் சுருக்கமாக சொல்லுங்கள்.

# ஈர்க்குச்சி விளையாட்டு

வழக்கம் போல் அனைவரும் மரத்தடியில் கூடினர்.


"என்ன விளையாட்டு விளையாடலாம்?" என்று வசந்தன் கேட்டான்.

"ஈர்க்குச்சி விளையாட்டு விளையாடலாம்," என்றான் கண்ணன்.

"ஈர்க்குச்சி விளையாட்டா?" ஒருவருக்கும் புரியவில்லை.

கண்ணன் தான் கொண்டுவந்த ஈர்க்குச்சிகளைக் காட்டினான். ஒரு பெரிய குச்சி; ஒரே அளவிலான பத்துச் சிறிய குச்சிகள். கண்ணன் விதிமுறைகளை விளக்கினான்.

"இரண்டுபேர் முதல் ஐந்துபேர் வரை விளையாடலாம். ஈர்க்குச்சிகளைக் குத்தாகப் பிடிக்கவேண்டும். சடாரெனக் கையை விடவேண்டும். குச்சிகள் தரையில் சிதறும். பின்னர் பெரிய குச்சியால் சிறிய குச்சிகளை ஒவ்வொன்றாகத் தென்னி எடுக்கவேண்டும். ஒரு குச்சியை எடுக்கும்போது இன்னொரு குச்சி அசையக்கூடாது. அவ்வாறு அசைந்தால் அவுட். அதுவரை எடுத்த குச்சியின் புள்ளி மட்டுமே அவனுக்குக் கிடைக்கும்.



ஒருவர் அவுட் ஆனதும் அடுத்த ஆள் விளையாடவேண்டும்".

"இதில் வெற்றி பெறுவது எப்படி?" குமாருக்குச் சந்தேகம்.

"ஒரு குச்சிக்குப் பத்துப் புள்ளிகள். கிடைத்த குச்சிகளின் அடிப்படையில் புள்ளிகளைக் கணக்கிட வேண்டும். யாருக்கு அதிகப் புள்ளி கிடைக்கிறதோ அவருக்கு வெற்றி." கண்ணன் சொல்லிமுடித்தான். பிரியா ஈர்க்குச்சிகளை பிடுங்கிக்கொண்டு ஓடினாள். நான் என் தோழிகளோடு விளையாடப் போகிறேன்.

- வெற்றி யாருக்கு?

| **பெயர்** | **கிடைத்த குச்சிகள்** | **மொத்தப் புள்ளிகள்** |
|---|---|---|
| பிரியா | 4 | |
| சுமதி | 7 | |
| கலா | 3 | |
| ரமா | 8 | |
| கனிமொழி | 5 | |

- நாங்கள் விளையாடியது

| **பெயர்** | **கிடைத்த குச்சிகள்** | **மொத்தப் புள்ளிகள்** |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

ஈர்க்குச்சிகளின் மதிப்பை 2, 5 என மாற்றியும் விளையாட்டைத் தொடருங்கள்.

- பாடுவோம் விளையாடுவோம்



**குலைகுலையா முந்திரிக்கா**
**நரியே நரியே சுற்றிவா**
**கொள்ளையடிச்சவன் எங்கிருக்கான்**
**கூட்டத்தில் இருக்கான் கண்டுபிடி!**

இதுபோல் பாட்டுப்பாடி விளையாடும் எத்தனை விளையாட்டுகள் உங்களுக்குத் தெரியும்?

# பம்பரமாம் பம்பரம்



"கண்ணா... வா! விளையாட்டு தொடங்கியிருக்கும்." குமார் அவசரப் படுத்தினான். இருவரும் மரத்தடிக்கு வந்தனர்.

நண்பர்கள் பம்பரம் விளையாடிக்கொண்டிருந்தனர்.


"ஓ...! இன்று பம்பரம் விளையாட்டா? வா கண்ணா... வீட்டிலிருந்து பம்பரம் எடுத்து வரலாம்." குமார் அழைத்தான்.

இருவரும் வீட்டை நோக்கி ஓடினர். குமார் தனது விளையாட்டுச் சாமான் பெட்டியைத் திறந்தான்.

"வாவ்...! எவ்வளவு விளையாட்டுப் பொருட்கள்!" கண்ணன் வியந்தான்.

குமார் பம்பரம் தேடினான். ஒரு பம்பரம் மட்டும் கிடைத்தது. "என்ன செய்ய?" குமார் வருத்தப்பட்டான்.

"என்ன குமார்...! விளையாடப் போகவில்லையா?"




குமாரின் அப்பா சுந்தரம் கேட்டார்.

“அப்பா! ஒரு பம்பரம்தான் இருக்கிறது” என்று வருத்தத்தோடு சொன்னான் குமார்.

“இவ்வளவுதானா! இப்போதே பம்பரம் செய்து தருகிறேன். ஒரு ஆணி மட்டும் கொண்டுவா” என்றார் சுந்தரம். குமார் ஆணி எடுத்து வந்தான். சுந்தரம் ஒரு மரக்கட்டையை எடுத்தார். அதைப் பம்பரம் போல் செதுக்கினார். ஆணியைப் பொருத்தினார். சிறிது நேரத்தில் பம்பரம் தயாரானது. “ஹாய்...! கொண்டை வைத்த பம்பரம்!” கண்ணன் ஆச்சரியப்பட்டான்.


இருவரும் பம்பரத்தை வாங்கிக்கொண்டு ஓடினர். குமார் பம்பரத்தைச் சுற்றினான். அது ‘ம்... ம்... ம்’ என்ற சத்தத்தோடு சுழன்றது.

“ஆஹா...! கொண்டை வைத்த பம்பரம்!” அனைவரும் வியந்தனர்.






- உங்களிடம் என்னென்ன விளையாட்டுப் பொருட்கள் உள்ளன?
- எல்லா விளையாட்டுப் பொருட்களையும் கடையில் தான் வாங்கு கிறீர்களா?

| சொந்தமாகச் செய்பவை | கடையில் வாங்குபவை |
|---|---|
| ஓலைப்பீப்பி | விசில் |
| ஓலைப்பந்து | பந்து |
| | |
| | |




- விளையாட்டுப் பொருட்கள் வாங்கலாம்.

| பொருள் | விலை (ரூபாய்) |
|---|---|
| | 35 |
|  | 28 |
|  | 12 |
|  | 60 |



- அதிக விலைக்கு வாங்கியது யார்?

| பெயர் | வாங்கிய பொருட்கள் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| கண்ணன் |  | |
| குமார் |  | |
| வசந்தன் |   | |
| முத்து |  | |

- கண்ணனைவிட முத்து எத்தனை ரூபாய்க்கு அதிகமாக வாங்கினான்?

## கடைக்குச் செல்வோம்... வாருங்கள்



- கண்ணனுக்குக் காரும் பீப்பியும் வேண்டும். அவனிடம் 100 ரூபாய் இருந்தது. மீதிவந்தால் வேறு ஏதாவது பொருளும் வாங்க வேண்டும் எனக் கண்ணன் நினைத்தான்.

  அவனுக்கு என்னென்ன பொருட்கள் வாங்கமுடியும்?

  .............................................................................

  .............................................................................

| விலைப் பட்டியல் |
| --- |
| பீப்பி ..............15 ரூ. |
| பொம்மை ...26 ரூ. |
| பஸ் ...............55 ரூ. |
| கார் ...............35 ரூ. |
| செண்டை ...20 ரூ. |
| சைக்கிள் .....30 ரூ. |

- குமார் 75 ரூபாய் கொண்டுவந்தான். அவனுக்கு என்னென்ன பொருட்கள் வாங்கமுடியும்?
- வசந்தனிடம் 45 ரூபாய் இருந்தது. பஸ் வாங்கவேண்டும். பணம் போதுமா? மேலும் வேண்டுமெனில் எவ்வளவு?
- நீங்களும் அவர்களுடன் இருந்தால் என்னென்ன பொருட்கள் வாங்குவீர்கள்?

  ..................................................................................................................................

- அதற்கு எத்தனை ரூபாய் வேண்டும்?
- எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? எழுதுங்கள்

  ..................................................................................................................................

- உங்கள் நண்பன் எவ்வாறு கண்டுபிடித்தான்?


  ..................................................................................................................................

# உறி அடிக்கலாம் வாங்க!



ஊர்த்திடலில் ஒரே கூட்டம். ஒலிபெருக்கியில் பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது. மைதானத்தில் உயரமாக இரண்டு தூண்கள் நட்டிருந்தார்கள். இரண்டு தூண்களுக்கும் இடையில் குறுக்காக ஒரு கயிறு கட்டியிருந் தார்கள். கயிற்றில் ஒரு மண் கலயம் தொங்கியது. கலயத்தை அலங்காரம் செய்திருந் தனர். அதுதான் "உறி'. ஒலி பெருக்கியில் பாட்டு நின்றது. அறிவிப்பு வந்தது.

"அன்பர்களே! நீங்கள் ஆவலோடு



எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் உறியடி இதோ ஆரம்பமாகின்றது.”

கண்ணன் முண்டியடித்துக்கொண்டு முன் வரிசைக்கு வந்தான். ஓர் இளைஞனின் கண்களைத் துணியால் கட்டினர். அவனைக் ‘கரகர’ எனச் சுற்றிவிட்டனர். அவன் தட்டுத் தடுமாறி நின்றான். அவனது கையில் ஒரு கம்பைக் கொடுத்தனர். அவன் காலால் தரையைத் தடவித் தடவி உறியை நோக்கி நடந்தான். உறியை அடிக்க முயற்சி செய்தான். மூன்று வாய்ப்புகள் கொடுக்கப்பட்டன. ஆனால் அவனால் சரியாக உறியை அடிக்க முடியவில்லை.

வேறொருவன் வந்தான், அனைவரும் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அவனாலும் உறியை அடிக்க முடியவில்லை.

மூன்றாவதாக வந்த இளைஞன் தட்டுத் தடுமாறி உறிக்கு நேராக வந்தான். அண்ணாந்து பார்த்தான். ஏதோ ஒரு உத்தேசத்தில் எம்பிக் குதித்து ஒரே அடி! உறி சுக்குநூறாக உடைந்தது. அதிலிருந்த மஞ்சள்நீர் நாலாபக்கமும் சிதறியது. அவன் வெற்றிபெற்றான். எல்லோரும் அவனைத் தூக்கி எடுத்தனர்.

- உங்கள் ஊர்த் திருவிழாவில் என்னென்ன போட்டிகள் நடைபெறும்?
- நீங்கள் பார்த்து ரசித்த விளையாட்டுப் போட்டியைப் பற்றிச் சொல்லுங்கள்.